**செய்தி வெளியீடு எண்: 080** **நாள் : 04.02.2016**

# செய்திக் குறிப்பு

சவூதி அரேபிய அமைச்சகத்தின் சுகாதார அமைச்சகத்தின் பல்வேறு அரசு மருத்துவமனைகளில் பணிபுரிவதற்கு இரண்டு வருட பணி அனுபவத்துடன் 30 வயதிற்குட்பட்ட பிஎஸ்சி/எம்எஸ்சி தேர்ச்சி பெற்ற பெண் செவிலியர்களுக்கான எழுத்து மற்றும் வாய்மொழித் தேர்வு புதுடில்லியில் 9.2.2016 முதல் 12.2.2016 வரையிலும், ஹைதராபாத்தில் 14.2.2016 மற்றும் 15.2.2016 ஆகிய நாட்களிலும், பெங்களூரில் 17.2.2016 முதல் 19.2.2016 வரையிலும் மற்றும் கொச்சியில் 21.2.2016 முதல் 24.2.2016 வரை நடைபெற உள்ளது.

தேர்ந்தெடுக்கப்படும் எம்எஸ்சி செவிலியர்களுக்கு ஊதியமாக ரூ.1,06,000/- மற்றும் பிஎஸ்சி செவிலியர்களுக்கு ரூ.80,000/- வரை ஊதியத்துடன் இலவச விமான டிக்கெட், உணவு, இருப்பிடம், விசா, மருத்துவச் சலுகை, போக்குவரத்து மற்றும் 30-40 நாட்கள் வருடாந்திர விடுப்பு, மற்றும் சவூதி அரேபிய அமைச்சகத்தின் சட்டதிட்டத்திற்குட்பட்ட இதர சலுகைகள் வழங்கப்படும்.

எனவே, அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு வேண்டி ஏற்கெனவே பதிவு செய்த தகுதியுள்ள பெண் செவிலியர்கள் தங்களின் முழுமைப்படுத்தப்பட்ட இன்றைய தேதி வரையிலான சுயவிவரங்களையும் மற்றும் பதிவு செய்யாத பெண் செவிலியர்கள், தங்களின் சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன், கல்வி, அனுபவம், பாஸ்போர்ட் மற்றும் வெள்ளை நிறப் பின்னணியில் எடுக்கப்பட்ட புகைப்படத்துடன் ovemclsn@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்களுக்கு 044-22505886/22502267 என்ற தொலைபேசி மூலமாகவோ அல்லது www.omcmanpower.com என்ற இந்நிறுவன வலைதளத்திலும் அறிந்து கொள்ளலாம்.

இந்திய அரசின் வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கான விவகார அமைச்சகத்தால் வழங்கப்பட்ட அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் முகவர் எண்.RCNo.B-0821/CHENNAI/CORPN/1000+/5/308/84, ஆகும்.

**நிர்வாக இயக்குநர்**
**அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**